(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 2(2).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2018 செப்தெம்பர் 21 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2018 ஒக்டோபர் 09, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மே 31 ஆம் திகதிய 2073/41 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 08 ஆம் திகதிய 2074/39 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 14 ஆம் திகதிய 2075/51 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 10 ஆம் திகதிய 2083/37 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2018 நவம்பர் 07, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கண்டி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு அபிவிருத்திக் கருத்திட்டத்தினதும் பெயர், செலவிடப்பட்ட பணத்தொகை, ஒப்பந்தம் வழங்கப்பட்ட கம்பெனியின் பெயர், அந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பணத்தொகை, திறந்துவைப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாது;

(iii) அமைச்சினால் கண்டி மாவட்டத்தில் எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

55/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டப் பிரேரணை இலக்கம் 206 இன் படி, 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தின் மூலம் அசௌகரியத்திற்கு உள்ளாக்கப்பட்ட முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முயற்சிகளின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் அசௌகரியத்துக்கு உள்ளான தொழில்முயற்சிகளுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அல்லது வசதியளிப்பதற்கு அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட செயன் முறைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வரவு செலவுத் திட்ட பிரேரணைக்கு அமைவாக, உள்நாட்டு மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படும் புதிய சட்ட விதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

140/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் தொடக்கம் தம்புள்ளை வரையில் நிர்மாணிக்கப்படும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை காரணமாக தம்புள்ளை பிரதேசத்தில் காணிகளை இழப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு இழப்பீடு பெற்றுக்கொடுப்பதில் பெரும் பிரச்சினை தோன்றியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

171/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேலியகொட மத்திய மீன் விற்பனைச் சந்தைத் தொகுதி திறக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி சந்தைத் தொகுதியின் வாகனத் தரிப்பிடம் திறந்துவைக்கப்பட்ட திகதி முதல் அதன் மூலமாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் வருடாந்தம் பெற்ற வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வாகன தரிப்பிடத்தின் வருமானத்தின் ஒரு பகுதி தனியார் கம்பனியொன்றுக்கு கிடைக்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி பணத்தொகை வருடாந்தம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி பணத்தொகையை வசூலித்தலானது மேற்படி தனியார் கம்பனிக்கு கேள்விப்பத்திர முறையியலொன்றின்படி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கு கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த ஏனைய கம்பனிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

208/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரச கடன் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தலா அரச கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

253/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலுசக்தி முகாமைத்துவம் பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்ட சட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனம் தாபிக்கப்பட்டதன் பின்னர் நிறைவேற்றப்பட்ட பிரதான பணி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுக்கு ஒப்பீட்டளவில் பெறுபேறு கிடைக்கப்பெறவில்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

434/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெக்கிராவ நகரத்தில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையம் 1977 ஆம் ஆண்டு முதல் இதுவரை முறையாக புதுப்பிக்கப்படாமையினால், மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் வண்டிகளை ஓட்டி நிறுத்துவதில் மிகவும் சிரமம் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தை எதிர்வரும் காலத்தில் மறுசீரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

460/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

489/ '18

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள தீவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தீவிலுமுள்ள மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தீவுகளில் மின் கட்டணப் பட்டியல்களை அறவிடுவதன் வினைத்திறன் யாதென்பதையும்;

(iv) மேற்படி தீவுகளுக்கு டீசல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு பதிலாக சூரிய மின்வலு அல்லது காற்று மின்வலுவை பயன்படுத்தக்கூடிய இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி வலுசக்தியை பயன்படுத்துகின்ற தீவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

502/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தொழில்நுட்ப விஞ்ஞானகூட வசதி உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) பதுளை மாவட்டத்தில் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

535/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முப்படைக்கு ஆட்களை ஆட்சேர்ப்பு செய்கின்றபோது, பயிலுநர் விண்ணப்பதாரியின் நடத்தை, ஒழுக்கம் மற்றும் கல்வித் தகைமை மிக உயர்வாக இருப்பினும், தந்தைக்கு சட்டவிரோத மதுசார குற்றச்சாட்டு உள்ளமை அல்லது தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களினால் பயிலுநர் விண்ணப்பதாரியின் ஆட்சேர்ப்பு இரத்தாகிவிடும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

560/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அம்மாவட்டத்தில் தற்போதுள்ள மௌலவி ஆசியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மௌலவி ஆசியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

581/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரை மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கை வெற்றிலை ஏற்றுமதி மூலம் ஈட்டிக்கொண்டுள்ள வருமானம் யாது என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் வெற்றிலை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) எமது பிரதான வெற்றிலைக் கொள்வனவாளரான பாகிஸ்தான் வெற்றிலைக்கு அதிக வரி விதித்துள்ளமை காரணமாக தற்போது விவசாயிகள் வெற்றிலையை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இதில் தலையீடு செய்து வெற்றிலை பயிர்ச்செய்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுதுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

964/ '18

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில், இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பரீட்சை நடாத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) எனவே, பரீட்சார்த்திகளுக்கு மேற்படி எந்த மொழியிலும் விடையளிக்கக் கூடியதாக இருந்தது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக சிங்கள மொழியில் விடையளித்த விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சிங்கள மொழிமூல வினாத்தாளுக்கும் ஆங்கில மொழியில் விடையளிக்க வேண்டுமென குறித்த பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் அல்லது வேறு வகையில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(vi) ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்காக சிங்கள மொழிமூலம் விடையளித்தல் தகைமையீனமாகுமென முன்னறிவித்தல் கொடுக்கப்படாத நிலையில், சிங்கள மொழிமூலம் விடையளித்த பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படாததன் மூலம் அநீதி நேர்ந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

988/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொணறாகலை மாவட்டத்தின் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2018 நவம்பர் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

15/ '18

கௌரவ கனக ஹேரத்,— சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வாழும் மூத்த பிரசைகளுக்கு (60 வயதைக் கடந்தவர்கள்) அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலனோம்புகை வசதிகள் யாவை;

(ii) 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் மூத்த பிரசைகளின் சனத்தொகை வீதம் ஒவ்வொரு வருடத்திற்கு ஏற்றவாறு எவ்வளவு;

(iii) எதிர்வுகூறல்களுக்கேற்ப 2021 ஆம் ஆண்டில் இவ்வீதம் எவ்வளவாக காணப்படும்;

(iv) இலங்கையில் மூத்த பிரசைகளின் வீதம் வருடாந்தம் துரிதமாக அதிகரிக்கின்றதென்பதை அவர் அறிவாரா;

(v) ஆமெனில், அதிகரிக்கும் இந்த மூத்த பிரசைகளின் பாதுகாப்பிற்கும் நலனோம்புகைக்கும் ஏதேனும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மூத்த பிரசைகளுக்கு வழங்கப்படும் சிரேஷ்ட பிரசைகள் அடையாள அட்டையின் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் சலுகைகள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) மூத்த பிரசைகளின் நிலையான வைப்பிலிருந்து அறவிடப்படும் வரியிலிருந்து இவர்களுக்கு விலக்களிப்பதற்கு உங்கள் அமைச்சு தலையிடுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கையில் உள்ள வயோதிபர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இந்த வயோதிபர் இல்லங்களின் தரத்தை நிர்ணயிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

19/ '18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விளையாட்டு மைதானங்களின் பெயர்கள் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி விளையாட்டு மைதானங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாது;

(v) மேற்படி விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் யாது;

(vi) கண்டி மாவட்டத்தில் ஏனைய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

37/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்த்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 174 ஆம் முன்மொழிவின் பிரகாரம், தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட முறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட "மேலதிக நிகழ்ச்சித்திட்டங்கள்" யாவை என்பதையும்;

(iii) மேற்படி மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பான நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில்,

(i) சுற்றாடல் சமநிலைமை பாதுகாத்தல்;

(ii) நிலைபேறான காணி முகாமைத்துவம்;

(iii) உயிர் வளங்களின் பாதுகாப்பு;

(iv) சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல்;

(v) வன வளங்களின் பாதுகாப்பு;

ஆகியவற்றுக்கு செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

158/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியிலிருந்து இன்று வரை அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கென வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வாகனத்தினதும் வகை மற்றும் விலை யாது என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

191/ '18

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த அரசாங்க காலத்தில் திருகோணமலை – மட்டக்களப்பு A15 வீதி புனரமைக்கப்பட்டதென்பதையும்;

(ii) இந்த வீதி புனரமைக்கப்படுகையில் உப்பாறு பிரதேசத்திற்கு பக்கத்தில் அமைந்துள்ள முறிஞ்சாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவிருந்த மதகு நிர்மாணிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) இதனால் வெள்ளம் வழிந்தோட இயலாமல் கிண்ணியா பிரதேசம் வெள்ளத்தில் மூழ்குகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த இடத்தில் ஒரு மதகினை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், மதகினை நிர்மாணிக்க எடுக்கின்ற காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

194/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் பங்கு உரிமையாளர் ஒருவராக திரு. கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் தலைவராக இவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலை ஈட்டிய வருடாந்த இலாபம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

223/ '18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவின், மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள புதுவிளாங்குளம், புட்குளம், குஞ்சுகுளம், மன்னகுளம், கொல்லர் புளியங்குளம் ஆகிய 05 கிராமங்களில் சுமார் 270 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள் என்பதையும்;

(ii) இக் கிராமங்கள் முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளன என்பதையும்;

(iii) மீள்குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து இதுவரைக்கும் இம் மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(iv) A-9 வீதிக்கு பிரவேசிப்பதற்கான பாதைகள் இல்லாமை மற்றும் கிராமங்களுக்கு ஊடாக அமைந்துள்ள புகையிரதப் பாதைக்கு குறுக்காகச் செல்கின்ற வீதிகளுக்கு பாதுகாப்பான புகையிரதக் கடவைகள் இல்லாத காரணத்தினால் இம் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

240/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள, இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின், இலங்கை பாடசாலை அதிபர் சேவையின் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் அலுவலர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி சேவைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்படி ஒவ்வொரு சேவையிலும் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப அமைச்சு எடுக்கின்ற நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

398/ '18

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கறுவா செய்கைபண்ணப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பு எவ்வளவு;

(ii) இலங்கையின் வருடாந்த கறுவா உற்பத்தி எத்தனை மெட்றிக் தொன்கள்;

(iii) உலக கறுவா தேவையில் இலங்கை எத்தனை சதவீதத்தை உற்பத்தி செய்கின்றது;

(iv) கறுவா ஏற்றுமதியில் இருந்து கிடைக்கின்ற வருடாந்த வருமானம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை புதிதாக செய்கைபண்ணப்பட்டுள்ள கறுவாச் செய்கையின் ஏக்கரளவு வருடவாரியாக எவ்வளவு;

(ii) கறுவா விளைநிலங்களின் அளவு படிப்படியாக குறைவடைந்துள்ளதா;

(iii) அவ்விதமாக விளைநிலங்களின் அளவு குறைவடைந்திருப்பின் அதில் தாக்கமேற்படுத்திய காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

432/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின், கெக்கிராவ நகர எல்லையில் அமைந்துள்ள நகரசபை கட்டடத்திற்கு பின்புறமாக உள்ள பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் வசிக்கின்றன என்பதையும்;

(ii) இவர்கள் உரிய தரமற்ற குடிசைகள் மற்றும் வீடுகளை நிர்மாணித்து அவற்றில் வசித்து வருகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தியைப் பொறுத்தவரை முக்கியமான நகர எல்லையில் அமைந்துள்ள மேற்படி பகுதியை உரிய ஒழுங்குமுறைப்படி அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

458/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை எதிர்நோக்கிய அம்பாந்தோட்டை நகர சபை வீடுகள் வீதியின் 3/19 ஆம் இலக்கமுடைய வீட்டில் வசித்த திரு. ரீ.என். அமீர் உள்ளிட்ட 68 பேர்களின் காணிகள் 2010.03.17 ஆம் திகதி கரையோரப் பூங்காவொன்றினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக மேலே குறிப்பிட்ட குழுவினருக்கு இற்றைவரை நட்டஈடு செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த குழுவினருக்கு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

472/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஊவா மாகாண சபையில் நடைபெற்றுள்ள மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முறைகேடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் SIN/ B/AG/KI/2017/02 ஆம் இலக்க மற்றும் 2017.04.20 ஆம் திகதிய புலனாய்வு அறிக்கை ஊவா மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இவ்வறிக்கையில் ஊவா மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை புத்தகப் பைகள் வழங்கப்பட்டமை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள 4 (ஆ) (i) தொடக்கம் (vii) வரையான பந்திகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) இந்த வெளிப்படுத்தல்கள் தொடர்பில் (ஆ) (i) தொடக்கம் (v) வரை மேற்கொள்ளப்பட்டுள்ள அவதானிப்புகளை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

481/ '18

கௌரவ டி.வீ. சானக,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை தனியார்மயப்படுத்தும் உடன்படிக்கையின் மூலம் வழங்கப்படுகின்ற காணிகளின் அளவு மற்றும் அவை வழங்கப்படுகின்ற அடிப்படை யாது என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கையின் மூலம் தொழிற்பாட்டு முனையத்திற்காக வழங்கப்படுகின்ற காணிகளுக்கு குத்தகை வாடகை அறவிடப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி துறைமுகத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களின் நிர்மாணிப்பு உரிமை உடன்படிக்கை செய்துகொண்டுள்ள இரண்டு கம்பனிகளில் ஒன்றுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், வழங்கப்படுகின்ற அடிப்படை யாது என்பதையும்;

(v) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்டத்தின் போது நிர்மாணிக்கப்பட்ட 110 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தீவு இவ்விரண்டு கம்பனிகளில் ஒன்றுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், வழங்கப்படுகின்ற அடிப்படை யாது என்பதையும்;

(vii) இதற்காக உள்நாட்டு அல்லது சர்வதேச கம்பனியொன்றிலிருந்து விலைமதிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) இன்றேல், அப்பெறுமதி தீர்மானிக்கப்பட்ட அடிப்படை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

524/ '18

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் "பங்கேற்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அலுவலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்கப்படுவதாயின், அது எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரதும் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உரித்தாகின்ற கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பெறுபேறுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

532/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வசிப்பதற்கு வீடின்றி ஆங்காங்கே சென்று, வெளி விறாந்தைகளில் இரவினைக் கழிக்கும் ஏழை மக்கள் காற்று மற்றும் மழையுடன் கூடிய நாட்களில் மிகவும் கவலைக்கிடமான நிலையை எதிர்நோக்க நேரிடுவதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கொழும்பு நகரத்திலும் ஏனைய பிரதான நகரங்களிலும் இத்தகைய கதியற்ற நிலையிலுள்ள ஏழை மக்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக தற்காலிக தங்குமிடங்கள் எனப்படும் "மடங்களை" நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 09, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

54/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 161 இன் பிரகாரம் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக மேற்படி செய்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளுக்கு இரண்டு வருடங்களுக்கான வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி முன்மொழிவுக்கிணங்க அத்தகைய வரி விடுவிப்பினைப் பெற்றுக்கொண்ட கம்பெனிகளின் பட்டியலை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி வரிவிடுவிப்பு வழங்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் இழந்த வரி வருமானம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

148/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின் ஒரே பாடசாலையில் 8 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியுள்ள ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட இருந்தனர் என்பதையும்;

(ii) ஆயினும், கலேவெல கல்வி வலயத்திற்குள் மேற்படி தீர்மானம் இன்னும் செயற்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், கலேவெல கல்வி வலயத்திற்குள் மேற்படி தீர்மானத்தைச் செயற்படுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

170/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 27/88 ஆம் இலக்க மற்றும் 01/99 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் அரச சேவையிலும், அரச கூட்டுத்தாபனங்களிலும் வெற்றிடங்களை நிரப்பும்போது அவற்றில் 3% சதவீதம் தகைமைபெற்ற மற்றும் அங்கவீனத் தன்மையானது அவர்களது பணிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தாத அங்கவீனமுற்றவர்களைக்கொண்டு நிரப்பப்பட வேண்டுமென்பதையும்;

(ii) இலங்கை நிர்வாக சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான 2004 (2005) திறந்த போட்டிப் பரீட்சைக்கு பரீட்சை இலக்கம் 0087548 இன் கீழ் தோற்றி 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள 1¼ ஆம் கட்டை, அம்பாறை வீதி, சியம்பலாண்டுவை என்ற முகவரியில் வதியும் உடல் ரீதியாக அங்கவீனமுற்ற ஒருவராகிய திரு. டபிள்யூ.எல்.ஆர்.என். லியனகே தம்மை இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதனைப் பரிசீலிக்குமாறு கோரியுள்ள மேன்முறையீடானது, அங்கவீனமுற்றவர்களை இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முடியாதெனக் குறிப்பிட்டு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கை நிர்வாக சேவைக்கு அங்கவீனமுற்றவர்களை ஆட்சேர்க்கலாகாதென ஏற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், திரு. லியனகேக்கு நீதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

266/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 -2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்பட்ட கிராம எழுச்சி வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீடு பெறுனர்களை தெரிவு செய்வதற்கு பின்பற்றப்பட்ட முறையியல் யாது;

(iii) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் ஊடாக பயனாளிகளாக நிவாரணம் கிடைத்தோரின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நாட்டில் வீடற்ற மக்களுக்காக போதியளவு ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

433/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இப்பலோகம பிரதேச செயலாளர் பிரிவின், 492 – அம்முணுவெட்டிய கிராம அலுவலர் பிரிவில், கலாவெவ வயல்வெளிக்கு குறுக்கே அலஹப்பெருமகம வரை அமைந்துள்ள கமத்தொழில் வீதி மிகவும் சீர்குலைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) சுமார் 1000 விவாசாயிகள் தமது அன்றாட நடவடிக்கைகளுக்கு இவ் வீதியை பயன்படுத்துவதோடு அறுவடை காலத்தில் இவர்கள் இக் கமத்தொழில் வீதியூடாக அறுவடைகளை ஏற்றிச் செல்கையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(iii) இவ் வீதி சுமார் 30 ஆண்டுகளாக புனரமைக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ் வீதி இதுவரை புனரமைக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இதன் பொருட்டு எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவ் வீதியை புனரமைப்பதற்கு தேவையான நிதியை வழங்குவாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

459/ ‘18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.04.30 ஆம் திகதி வரை சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு விஜயத்துக்காகவும் உறப்பட்ட செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) சனாதிபதியுடன் ஒவ்வொரு விஜயத்தின்போதும் பங்கேற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) சனாதிபதியுடன் வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்ற ஏனைய ஆட்களின் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

475/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) ஊவா மாகாணசபையில் இடம்பெற்றுள்ள மற்றும் இடம்பெற்று வருகின்ற முறைகேடுகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் SIN/B/AG/KI/2017/02 இலக்கமும் 2017.04.20 திகதியும் கொண்ட புலனாய்வு அறிக்கை ஒன்று ஊவா மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வறிக்கையில் ஊவா மாகாணசபையின் பிரதான அமைச்சரின் ஆலோசகர்களை நியமித்தல் சம்பந்தமாக வெளிக்கொணரப்பட்டுள்ள, பந்தி இலக்கம் 2 (அ)(i) தொடக்கம் (x) வரையான விடயங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி வெளிக்கொணரல்கள் தொடர்பாக 2 (ஆ) (i) தொடக்கம் (xiii) வரை மேற்கொண்டுள்ள அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

534/ ’18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெல்மடுல்ல, கிரிபத்கல மலையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக மேற்படி கிராமத்தில் சுமார் 30 குடும்பங்கள் இருப்பிடங்களை இழந்துள்ளனர் என்பதையும்;

(ii) அனர்த்தத்துக்கு ஆளான குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பது கிராமத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள தொம்பகம்மன எனும் பிரதேசத்திலாகும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு தூரப் பிரதேசங்களில் வழங்கப்பட்டுள்ள காணிகளுக்குப் பதிலாக மேற்படி கிராமத்திற்கு அருகே அமைந்துள்ள கிரிபத்கல அரச பெருந்தோட்டத்திலிருந்து காணிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு இவர்கள் கோரியுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு கிரிபத்கல அரச பெருந்தோட்டத்திலிருந்து காணிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

559/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாதம்பேயில் அமைந்துள்ள வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தனிவெல்ல கோயிலுக்கு அருகில் கினிப்பிட்டிய வாவி என்ற பெயரில் ஒரு வாவி உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாவியின் நீரைக்கொண்டு பயிரிடப்படும் வயல்களின் அளவு யாதென்பதையும்;

(iii) அதன் மூலம் நன்மை பெறுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்போது குறித்த வாவியில் பல்வேறு நீரியில் தாவரங்கள் வளர்ந்து வாவியானது சீர்குலைந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், குறிப்பிட்ட வாவியை துரிதமாக மறுசீரமைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

577/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் குருநாகல் மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கேற்ப எவ்வளவென்பதையும்;

(iii) இந்நோயாளர்களுக்கு தேவையான சுகாதார வசதிகள் மற்றும் வேறு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

(iv) குருநாகல் மாவட்டத்தில் வேகமாக பரவும் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் செயன்முறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

594/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாநிதி ஐ.எச்.கே மஹாநாம, காணி அமைச்சின் செயலாளர் பதவியை வகிக்க முன்னர் பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர் பதவியை வகித்துள்ளார் என்பதையும்;

(ii) இக்காலத்தில் பிரதம கணக்கீட்டு அலுவலராக அமைச்சின் கேள்விப் பத்திர சபைகளில் தீர்மானங்களை மேற்கொள்வதில் மாத்திரமின்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபைகளிலும் பணியாற்றியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஔடத இறக்குமதி முதலிய அலுவல்கள் பற்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபைகளில் தவிசாளர்/உறுப்பினராக திரு. மஹாநாம பணியாற்றியுள்ள காலவரையறை மற்றும் வகித்துள்ள பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திர சபைகளுக்கு கேள்விகளை சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தவிசாளர், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விப் பத்திரங்களில் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுக்குரிய நிறுவனங்கள் மற்றும் விலைகள் யாவை என்பதையும்;

(iv) திரு. மஹாநாமவின் தலைமையிலான அல்லது பங்கேற்புடைய கேள்விப்பத்திர சபைகளின் அங்கீகாரத்துடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஔடத வகைகள், அளவுகள் மற்றும் நாடுகள் யாவை என்பதையும்;

(v) 2010 ஆண்டு தொடக்கம் இற்றைவரை சுகாதார அமைச்சின் அமைச்சரவை கேள்விப் பத்திர சபை கூடிய திகதிகள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

989/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொணறாகலை மாவட்டத்தின் மெதகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1111/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர.— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்துவரும் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் பொது மன்னிப்புப் பெற்று விடுதலையான கைதிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப யாது;

(iii) மரண தண்டனை இரத்துச் செய்யப்பட்ட காலப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்பட்ட, 4 அல்லது 8 வருட காலப்பகுதியை மீளாய்வு செய்வதன் மூலம், மரண தண்டனைக்கு உட்பட்டதாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவிப்பவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கும் செயன்முறை தற்போதும் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(iv) இல்லையெனில், இதற்கான காரணம் யாது என்பதையும்;

(v) மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்கையில், அவர்களையும்விட அதிக காலம் இத்தண்டனையை அனுபவித்த நன்னடத்தை கொண்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், இதற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1140/ '18

கௌரவ முஹம்மது நசீர்,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் நாடாளாவிய ரீதியில் நடைமுறையிலுள்ள காதி நீதிமன்ற வலயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வலையங்களிலுள்ள காதி நீதிபதிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு காதி நீதிபதியும் நியமிக்கப்பட்ட திகதி மற்றும் நியமனக் காலம் நிறைவுபெறும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு காதி நீதிபதியினதும் கல்வி, தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி சட்டத்தின் கீழ் காதி நீதிபதிகளை நியமிக்கும்போது பரிசீலனை செய்யப்படும் கல்வி, தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1151/ '18

கௌரவ எஸ்.சி. முத்துகுமாரண,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை,

(i) மகாவலி 'எச்' வலயத்திற்கு நீர்ப்பாசன நீர் கிடைக்கின்ற மகாவலியின் மேற்பக்க நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள பிரதேசங்களுக்கு கிடைத்த மழைவீழ்ச்சி ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் யாது என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் பயிர்செய்யப்பட்ட வயற் காணிகளின் அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் யாது என்பதையும்;

(iii) நீர்ப் பற்றாக்குறை காரணமாக பயிர்செய்ய முடியாதுபோன விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிவாரணம் வழங்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(ii) மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்து விளைச்சல் கிடைக்கும் வரை இந்த நிவாரணத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 10, சனிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

30/ ' 18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை;

(iii) மேற்படி சர்வதேசப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்த்தல், கட்டணம் அறவிடல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

65/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 289 ஆம் இலக்க பிரேரணையின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபையை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தைத் திருத்துதல் சம்பந்தமாக இற்றைவரை அடையப்பட்டுள்ள முன்னேற்றம் யாதென்பதையும் அது சம்பந்தமான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளவர்கள் யாவரென்பதையும்;

(iii) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபையை வலுவூட்டுவதற்கு 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியனை பயன்படுத்திய முறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

195/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2016 ஆம் ஆண்டில் கொஸ்கம, சாலாவ இராணுவ ஆயுத களஞ்சியம் வெடித்தமையினால்,

(i) உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உயிரிழந்த ஆளொருவருக்காக அரசாங்கத்தின் சார்பில் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேதமடைந்த வீடுகளுக்காக செலுத்தப்பட்ட கூடியபட்ச மற்றும் குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இடம்பெயர்ந்த சகலருக்கும் நிரந்தர வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) இடம்பெயர்ந்த குடும்பமொன்றிற்கு நிரந்தர வீடொன்று பெற்றுக் கொடுக்கப்பட்ட அண்மித்த திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

270/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் வயல் காணிகளை மீட்பதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) எம்பிலிபிட்டிய, உடகம சந்திக்கு அருகாமையிலுள்ள வயல் காணியொன்று மீட்கப்பட்டுள்ளதென்பதோடு, பிரதேச மக்களின் எதிர்ப்புக் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) இதற்காக அனுமதி வழங்கப்பட்டிருப்பின், அதன் அடிப்படை யாது என்பதையும்;

(v) தற்போது மீட்கப்பட்டுள்ள இந்த வயல் காணியில் நிரப்பப்பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

435/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலாவாவியிலிருந்து திசாவாவி வரை தண்ணீரை கொண்டு செல்லும் யோதஎல கால்வாய்க்கட்டுடன் இணைந்து காணப்படும் வீதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு சொந்தமானது என்பதையும்;

(ii) இந்த வீதியை 6 கிராமங்களைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் பயன்படுத்துவதோடு, குறித்த வீதி சுமார் 30 வருட காலமாக புனரமைக்கப்படாததன் காரணமாக மிகவும் சீர்குலைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படாததற்கான காரணம் யாது என்பதையும்;

(ii) இந்த வீதி புனரமைக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

498/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இன்றளவில் நடைமுறையிலுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், உத்தேச குறிக்கோள் மற்றும் உள்ளடக்கப்படும் பிரதேசங்கள் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக, தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

561/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்கிவரும், புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகள், மத்திய மருந்துச்சாலைகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வோர் இடத்தினதும் பெயர் யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் சேவையிலீடுபட்டுள்ள மொத்த ஊழியர் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iv) மேற்படி சுகாதார நிலையங்களில் ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை;

(vi) மேற்படி சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

954/18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) என்டி லெகோ பிரைவட் லிமிடெட் (Ante Leco (Pvt) Ltd.) கம்பனி தொடர்பில் அரசாங்கத்துக்கு உள்ள உரிமை யாது;

(ii) மேற்படி கம்பனி ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் யாது;

(iii) மேற்படி கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் மானிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி கம்பனியின் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(v) ஆரம்பம் முதல் குறிப்பிட்ட கம்பனி அடைந்துள்ள இலாபம் அல்லது நட்டம் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1000/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1121/ '18

கௌரவ கனக ஹேரத்,— அரச தொழில் முயற்சிகள் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விமானமும் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்த பின்னர் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மீண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்ட விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு மீண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்ட விமானங்களை விட பழைய விமானங்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் குத்தகை அடிப்படையில் இன்னும் பயன்படுத்தப்பட்டுவருகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்வாறு பழைய விமானங்களை இற்றைவரையில் வைத்திருப்பதற்கான காரணங்கள் யாவை என்பைதயும்;

(iv) இதற்குரிய பிரமாணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1134/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சகக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மே மாதத்தின் ஆரம்ப காலப் பகுதியில் ஏற்பட்ட தொற்றுக் காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொற்று நோய்க்கு உள்ளாகியதாக பதிவாகியுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவர்களுக்கு மத்தியில் நோய்க்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட நோய் நிலைமையின் காரணமாக மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) மரணித்த சிறுவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நோய்க்கான விசேட அறிகுறிகள் யாவையென்பதையும்;

(ii) அதற்காக போதுமான மருந்துகள் வைத்தியசாலைகள் கொண்டிருந்தனவா என்பதையும்;

(iii) நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை குறிப்பிடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1139/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் நாட்டில் காணப்படுகின்ற மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மாநகர சபைகளாக தரமுயர்த்தப்படவுள்ள நகரசபைகள் யாவை என்பதையும்;

(iii) நகர சபைகளாக தரமுயர்த்தப்படவுள்ள பிரதேச சபைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆண்டு தொடக்கம் 2018 மே வரையான காலத்தில் அமைச்சினால் டிராக்டர், கலிபவுசர், தண்ணீர் பவுசர் முதலிய பல்வேறு இயந்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள், வழங்கப்பட்ட உபகரணங்கள், அவை பெற்றுக்கொடுக்கப்பட்ட திகதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) எதிர்காலத்தில் இவ்வாறான இயந்திர உபகரணங்கள் உள்ளிட்ட கருவிகள் பெற்றுக்கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1167/ '18

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— நீர்ப்பாசன, நீர்வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் காணப்படும் பிரதேசங்களென அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(ii) மேற்படி பிரதேசங்களில் குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மண்சரிவு அபாயம் காணப்படும் பிரதேசங்களில் வாழும் குடும்பங்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1187/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1335/ '18

கௌரவ சி. சிறீதரன்,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டில், "சர்வதேச மட்ட விளையாட்டரங்கு" என்ற கருப்பொருளின்கீழ், கிளிநொச்சி மாவட்ட நகர மத்தியில் அமைந்த பொது விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகளை ஆரம்பித்து 09 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை அவ்விளையாட்டரங்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விளையாட்டரங்கு சர்வதேச மட்டத்திலான விளையாட்டரங்கா அல்லது மாவட்ட மட்ட விளையாட்டரங்கா என்பதையும்;

(ii) இப் பொது விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 09 வருடகாலப் பகுதியினுள் இப்பணத்தில் செலவளிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இவ்விளையாட்டரங்கின் நிர்மாணப் பணிகளுக்காக இதுவரை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) இதுவரை ஒப்பந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரரின் செயற்பாடுகள் என்னவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இவ்விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகள் தாமதமடைவதால் மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் எவ்வளவு தூரம் அசௌகரியத்திற்குள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 12, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

66/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு இலக்கம் 288 இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குச் சந்தை தரகர்கள் முகம்கொடுத்திருந்த நெருக்கடிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அரசு தலையீடு செய்த முறை யாதென்பதையும்;

(iii) 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையில் செயலாற்றிய தரகர்களின் எண்ணிக்கை, இவர்களின் பிரதேச ரீதியிலான பரம்பல், மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் தரகர் கொடுக்கல் வாங்கல்களின் அளவு ஆகியவற்றைக் காட்டும் ஒரு தரவு அட்டவணையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டினுள் ஒருங்கிணைந்த பங்குச் சந்தை தரகர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

149/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது மாத்தளை மாவட்டத்தில் மாடுகளின் குளம்பு நோய் பரவலாக விரிவடைந்து வருகின்றதென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில் இந்நிலைமையைக் கட்டுப்படுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

173/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஐக்கிய இராச்சியத்தின் டாற்மவுத் (Dartmouth) றோயல் கடற்படைக் கல்லூரியில் பயிற்சிக்காக இலங்கை கடற்படையினால் தெரிவுசெய்து அனுப்பப்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(ii) அந்தப் பயிற்சியின் பின்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் கடற்படையில் பணியாற்றிய காலம் மற்றும் சேவையை முடிக்கும் போது வகித்த பதவியை வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

(iii) இலங்கை கடற்படை உத்தியோகத்தர்களுக்கு மேற்படி பயிற்சி வாய்ப்புகள் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றனவா;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

271/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்தில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களினதும் கல்வியல் கல்லூரி டிப்ளோமாதாரி ஆசிரியர்களினதும் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சப்ரகமுவ மாகாணத்திற்கு இணைக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அக்காலப்பகுதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) சப்ரகமுவ மாகாணத்தில் நிலவுகின்ற பட்டதாரி மற்றும் கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

500/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

537/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாகச் சேவை பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதாகக் கூறி 980 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) எனினும், இற்றைவரை பரீட்சைக்கு தோற்றிய ஏனைய பரிட்சார்த்திகளுக்கு பெறுபேறுகள் கூட அனுப்பப்படவில்லையென்பதையும்; இணையதளத்தில் கூட பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது பற்றி ஆராய்ந்து எஞ்சிய பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இதற்கு அமைவாக தகைமை பெற்றவர்களை வெற்றிடங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

601/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— கடற்றொழில் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "குளத்துடனான ஒரு கிராமம்" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் வடமேல் மாகாணத்தில் இது வரை அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) அந்த வேலைத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iv) எதிர்வரும் காலத்தில் இவ்வேலைத்திட்டம் வடமேல் மாகாணத்தில் எவ்வாறு செயற்படுத்தப்படும் என்பதை அவர் அறிவிப்பாரா;

என்பதை அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல் ஏன்?

955/ ' 18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல், மல்லவபிட்டிய இலங்கை மின்சார சபை அலுவலக வளாகத்தில் பாரிய மின்பிறப்பாக்கி இயந்திரத் தொகுதியொன்று நிறுவப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இந்த இயந்திரங்கள் இயங்கும்போது எழும் அதிக ஒலி காரணமாக சுற்றுப்புறத்திலுள்ள மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த இயந்திரங்களை பொருத்துவதற்கு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், சுற்றாடல் மதிப்பீட்டை மேற்கொண்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இப்பிரச்சினையைத் தீர்க்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

976/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தில், அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள தம்புத்தேகம வைத்தியசாலையில் மருத்துவர் அடங்கலான ஏனைய பணியாட்டொகுதியில் பெருமளவிலான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) இது தொடர்பாக 2017.09.27 ஆம் திகதி புதன்கிழமை "லங்காதீப" பத்திரிகையில் "ரஜ ரட்ட சிறப்பிதழில்" ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இச்செய்தியில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1136/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 நவம்பர் மாதத்தில் ஒரு தினம் கோலாலம்பூரை நோக்கிச் செல்லவிருந்த மலேசிய வர்த்தகர் ஜயசுதீர் ஜெயராம் உட்பட மூவர் இந்த நாட்டிலிருந்து பணத்தை எடுத்துச் சென்றதன் காரணமாக இலங்கைச் சுங்கப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனரா;

(ii) அவ்வாறாயின், இவர்கள் கைதுசெய்யப்பட்டபோது இவர்களின் உடைமையிலிருந்து பணம் எவ்வளவு;

(iii) மேற்படி நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கைதுசெய்யப்பட்ட நபர்கள், சம்பந்தப்பட்ட விசாரணைகள் முடிவடையுமுன்னர் கோலாலம்பூர் நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனரா;

(ii) அவ்வாறாயின், அதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட்டது;

(iii) அது சம்பந்தப்பட்ட விசாரணைகள் மேற்படி நபர்கள் இன்றி முன்னெடுக்கப்பட்டுள்ளதா;

(iv) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் அது சம்பந்தப்பட்ட கோப்புகள் இன்றளவில் உள்ளனவா;

(v) கைப்பற்றப்பட்ட பணம் மீண்டும் குறித்த நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா;

(vi) இன்றேல், குறித்த பணம் இன்றளவில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(vii) இந்த விசாரணையில் ஈடுபட்ட சுங்கப் பிரிவு அலுவலர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1142/ '18

கௌர முஹம்மது நசீர்,— அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 சனவரி தொடக்கம் 2018 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குள் இனந்தெரியாத ஆட்களின் தாக்குதல்களுக்கு இலக்காகிய மற்றும் தீக்கிரையாக்கப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி சம்பவங்கள் பற்றி பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கிணங்க வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு சம்பவத்துடனும் தொடர்புடைய பொலிஸ் முறைப்பாட்டு இலக்கம், திகதி மற்றும் ஏற்புடைய பொலிஸ் ஆளுகைப் பிரதேசத்தை வெவ்வேறாக குறிப்பிடுவாரா;

(iii) மேற்படி முறைப்பாடுகளில் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு முறைப்பாடுகளுக்கிணங்க நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு இலக்கங்கள் மற்றும் நீதிமன்ற ஆளுகைப் பிரதேசங்கள் யாவை என்பதைத் தெரிவிப்பாரா?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1168/ '18

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆண்டுக்கான "திவியட்ட உதானய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறியளவு கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு மாத்தறை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட நிதியை 2017 ஆண்டில் விடுவிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு அவர்கள் ஈடுபட்டுள்ள துறைகளுக்காக உதிரிப்பாகங்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1170/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யால தேசிய வனப்பூங்காவில் அமைந்துள்ள வனசீவராசிகள் பேணுகை திணைக்களத்திற்கு சொந்தமான சுற்றுலா பங்களாக்களில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தேசிய வனப்பூங்காவிற்குள் நாய்கள் உள்நுழைந்தால் அவற்றை வெளியேற்றுதல் அல்லது அவற்றை துப்பாக்கி வேட்டுக்களினால் கொன்றுவிடுதல் பூங்காவின் பொறுப்பாளரின் பொறுப்பாகவிருப்பினும், யால நிவ் பூதவ பங்களாவில் இருந்த ஒரு நாயை புலிகளுக்கு இரையாகும் வகையில் சுதந்திரமாக அலைந்து திரிவதற்கு இடமளிக்கப்பட்டமை பற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) சுற்றுலாப் பயணிகளுக்கு புலிகளை காட்டுவதற்கு நாய்களை இரையாக பயன்படுத்துவதற்கு பூங்கா பொறுப்பாளர் வனப் பயணத்தில் ஈடுபடுவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளமை பற்றி விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் முடிவுகள் யாவையென்பதையும்;

(v) யால வனப்பூங்காவிற்கு உள்நுழைந்ததின் விளைவாக துப்பாக்கி வேட்டு வைக்கப்பட்ட அல்லது வெளியில் கொண்டு வந்த விடப்பட்ட நாய்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) இவ்வாறான விடயங்கள் காரணமாக சூழலியலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ள யால தேசிய வனப்பூங்காவின் நிருவாகம் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1188/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1266/ '18

கௌரவ எஸ்.எம் மரிக்கார்,— நிதி, வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கிழக்கு ஹேவாகம் கோரலே பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தினால் இலங்கை மத்திய வங்கியின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற நிதி நிறுவனமொன்றின் ஊடாக திறைசேரி முறிகள் கோரப்பட்டு, பெற்றுக் கொள்ளப்பட்டு அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இக் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதி யாதென்பதையும்;

(iv) இச் சங்கத்தின் நிதிக்கு என்ன நடந்துள்ளதென்பதையும்;

(v) இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்குப் பொறுப்பு இல்லையா என்பதையும்;

(vi) இந் நிதி வைப்பு செய்யப்பட்ட நிறுவனம் இன்றளவில் இயங்குகின்றதா என்பதையும்;

(vii) அந் நிறுவனத்தின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட கிழக்கு ஹேவாகம் கோரலே பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிராமிய வங்கி வைப்பாளர்களுக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) கூட்டுறவு பணிப்பாளர் சபைக்கு அரச வங்கியொன்றைத் தவிர தனியார் நிதி நிறுவனமொன்றில் நிதி முதலீடு செய்ய முடியுமா என்பதையும்;

(iii) மக்கள் பணத்தை தன் விருப்பம் போல வைப்பு செய்துள்ள காரணத்தினால் ஏற்பட்ட இழப்பினை பணிப்பாளர் சபையிடமிருந்து அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இது தொடர்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 13, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/ ' 18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் ஒவ்வொரு கல்விக் கோட்டத்தின் அடிப்படையில் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மத்திய மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டிருப்பின் அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவை;

(iv) அப்பாடசாலைகளை மீளத் திறப்பதற்கோ அல்லது மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் வளங்களின் மூலம் உச்சமட்டப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கோ அமைச்சினால் பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

67/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு 287 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீழ்ச்சியடைந்துள்ள பங்குப் பரிமாற்றல்களை உயர்த்துவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பயனுறுதிமிக்க மாற்றங்கள் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்ட பங்குப் பரிமாற்றல்கள் உயர்வடைந்த அளவினை சம்பந்தப்பட்ட சுட்டெண்களை பயன்படுத்தி தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) 2009 ஆம் ஆண்டின் பின்னர் இற்றைவரை ஒவ்வொரு வருடத்தினதும் பங்குச் சந்தை பரிமாற்றல்களின் அளவு பற்றிய தரவுக் குறிப்பொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யுத்த மோதல்கள் முடிவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் போக்கினை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

186/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிலைபோசெட் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை;

(iii) மேற்படி தடைக்கென சிபாரிசுகளை முன்வைத்த நிபுணர் அமைப்புக்கள் அல்லது நபர்கள் யாவர்;

(iv) கிலைபோசெட் தடையை நீக்க அரசாங்கம் முடிவு செய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய விடங்கள் யாவை;

(vi) தடையை நீக்குவதற்கென சிபாரிசுகளை முன்வைத்த நிபுணர் அமைப்புக்கள் அல்லது நபர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

206/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.07.31 ஆம் திகதியளவில் அரசாங்கத்தின் பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்கள் கருத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

272/ ' 18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய சந்திரிக்கா வாவியிலிருந்து குடிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) எம்பிலிப்பிட்டிய வாரச் சந்தையின் கழிவுப்பொருட்கள் சந்திரிக்கா வாவியில் சேர்வதால் பாரியளவில் சுற்றாடல் மாசு ஏற்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நிலைமையைத் தணிப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

603/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்குடும்பங்களது கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக "புத்தளத்திற்கு உதயம்" வேலைத்திட்டத்தின் கீழ் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் புத்தளம் மாவட்டத்தில் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை கிராம அலுவலர் பிரிவு வாரியாக யாது என்பதையும்;

(v) புத்தளம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

753/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகளுக்கு ஆலோசகர்களை நியமிக்கின்ற சட்டரீதியான முறையியல் யாதென்பதையும்;

(ii) ஊவா மாகாண சபையில் ஆலோசகர் நியமனம், இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கல் மற்றும் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளுதல் தொடர்பாக கணக்காய்வு விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஏற்புடைய கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இச் சபைக்கு அறிவிப்பாரா என்பதையும்;

(iv) அதற்கு மாகாண சபை உத்தியோகத்தர்கள் அளித்துள்ள பதில்களை இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இதன் போது ஏதேனுமொரு மோசடி, முறைகேடு இடம்பெற்றிருப்பின், அது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

977 / '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக அனுராதபுரம் மாவட்டத்தின் விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளுக்கு, வீடுகளுக்கு மற்றும் உயிர்களுக்கு இழப்புகள் ஏற்படுவதென்பதையும்;

(ii) அதற்கான தீர்வுகளை பெற்றுத்தரும்படி வனசீவராசிகள் அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும், இற்றைவரை நிரந்தர தீர்வொன்று வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தற்போது ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், குறிப்பிட்ட அலுவலர்களை விழிப்புணர்வூட்டி இம்மாவட்ட மக்களுக்கு காட்டு யானைகளால் ஏற்படுகின்ற இழப்புகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1001/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1122/ '18

கௌரவ கனக ஹேரத்,— அரச தொழில் முயற்சிகள் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன் கம்பனியினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட விமானமொன்று இந்நிறுவனத்தினால் குத்தகை அடிப்படையில் வேறு நிறுவனமொன்றுக்கு மீளளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமானம் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட லீசிங் நிறுவனத்திற்கு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன் கம்பனியினால் செலுத்தப்படும் மாதாந்த குத்தகை தவணைப் பணம் எவ்வளவென்பதையும்;

(iii) மீண்டும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிறுவனத்தினால் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன் கம்பனிக்கு செலுத்தப்படும் மாதாந்த குத்தகை தவணைப் பணம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி விமானம் விமானப் பயண அனுமதிப்பத்திரம் மற்றும் சிவில் விமானங்கள் பதிவு பட்டியலுக்குள் உள்ளடக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி விமானத்திற்கு பதிவிலக்கம் இருக்குமெனின், அவ்விலக்கம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1137/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச தொழில் முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) ஶ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் மூலம் குடிவரவு குடியகழ்வு செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விமானப் பறப்புக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) விமானக் கம்பனி ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) பெறப்பட்ட வருமானம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நட்டம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த நட்டங்களுக்கான காரணங்கள் ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1147/ '18

கௌரவ முஹம்மது நசீர்,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் வட மாகாணத்தில் மீள்குடியேறிய சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

477/ ' 18

கௌரவ விமலவீர திசாநாயக்க,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கஞ்சா பயிரிடுவதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு காரணமாகவிருந்த அடிப்படை யாதென்பதையும்;

(iii) கஞ்சா ஒரு போதைபொருள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) கஞ்சா பாவனையின் காரணமாக உடல் மற்றும் உள சுகாதாரத்தில் சீர்கேடு ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) தற்போது கஞ்சா பயிரிடுவதற்காக சட்டரீதியாக அனுமதி கிடைத்துள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அவ்வாறு சட்டபூர்வமாக கஞ்சா பயிரிடப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1189/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1336/ '18

கௌரவ சி. சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1000 பாலங்களை நிர்மாணிப்பதற்கான திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அக்கருத்திட்டம் அப்பிரதேச மக்களின் நடவடிக்கைகளுக்குப் பயனற்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாலம் 1000 கருத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலங்கள் பற்றிய விபரங்கள் என்பதையும்;

(ii) கருத்திட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் யாவர் என்பதையும்;

(iii) இப்பாலம் தொடர்பாக வேறு திட்டமொன்று அப்பிரதேசங்களுக்குப் பொருத்தமானவாறு தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட மாதிரியொன்றின்படி, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டப் பாலங்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்;

(ii) வேலை முடிவுறுத்தப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iii) இதுவரை நிர்மாணிக்கப்பட்டுவரும் பாலங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iv) நிர்மாணிக்கப்படவுள்ள பாலங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்:

(v) இப்பாலங்களின் ஒப்பந்ததாரர்களின் விபரங்கள் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2018 நவம்பர் 14, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

68/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 286 இன் பிரகாரம், அரச பிணையங்கள் சந்தை அபிவிருத்திக்காக "முறிகள் தீர்ப்பனவு" நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் சந்தைப்படுத்தல் கட்டமைப்பொன்றைத் தாபிப்பதற்காக அரசாங்க திரட்டு நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் பயன்படுத்தப்பட்ட விதத்தை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) 2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நடத்தை எவ்வாறு அமைந்திருந்தது என்பதையும், இவர்களால் ஒவ்வொரு வருடத்திலும் மீளப்பெறப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எவ்வளவென்பதையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கையின் பிணையங்கள் சந்தையின்பால் ஈர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

273/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவா மாகாணத்தில் இன்றளவில் இருக்கும் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக அந்த எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் சப்ரகமுவா மாகாணத்தினுள் இதுவரை தொழில் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) ஏனைய வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச மற்றும் தனியார் துறையில் தொழில் வழங்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

754/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கு நோய் நாடுபூராவும் பரவியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையில் டெங்கு நோயினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவன அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்கள் உரிய வகையில் தமது பணிகளைச் செய்யத் தவறுகின்றமையால் டெங்கு நோய் பரவுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனின், டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டுவதற்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

978/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலா வாவியிலிருந்து அனுராதபுரம் திஸாவாவிக்கு தண்ணீரை வழங்குகின்ற கலா வாவி, பழைய யோதஎல கால்வாய், ஐக்கோனியா போன்ற நீர்வாழ் தாவரங்களால் மூடப்பட்டிருப்பதால் தண்ணீர் விரயமாகின்றது என்பதையும்;

(ii) பயிர்செய்கைக்காக தண்ணீர் வழங்கும் போது மேற்படி நீர்வாழ் தாவரங்களின் காரணமாக தண்ணீர் பாய்ச்சப்படுவதில் தாமதம் ஏற்படுத்துகின்றதென்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும் இதுவரை தீர்வொன்று கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பெரும்போகத்தில் பயிர்ச்செய்கைக்காக தண்ணீரை திறந்துவிடுவதற்கு முன் மேற்படி நீர்வாழ் தாவரங்களை அகற்றுவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1150/ '18

கௌரவ எஸ்.சி. முத்துகுமாரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 பெரும்போகத்தில் பறங்கிக்காய் மற்றும் தக்காளி போன்ற பயிர்ச்செய்கைகளின் அறுவடையை விற்கமுடியாமை காரணமாக விவசாயிகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) இதனால் பறங்கிக்காயை கொள்வனவு செய்வதற்காக பொதுத் திறைசேரி 05 மில்லியன் ருபாவை ஒதுக்கியிருப்பதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தி உண்மையானதா;

(iii) அவ்வாறெனின், அவற்றை விற்பது மற்றும் கொள்வனவு செய்தலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) அந்த மரக்கறி ஒரு கிலோ கொள்வனவு செய்யப்பட்ட விலை எவ்வளவு ;

(ii) அவை விற்கப்பட்ட விலை எவ்வளவு:

(iii) கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறியின் அளவு எவ்வளவு:

(iv) இந்த வேலைத்திட்டத்தினால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு;

(v) இந்த வேலைத் திட்டம் வெற்றியளிப்பின் இது எதிர்வரும் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1173/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் கிராமிய பாற்பண்ணையாளர்களிடமிருந்து தினசரி பெற்றுக்கொள்ளப்படும் பசுப் பால் மற்றும் எருமைப் பால் லீற்றர்களின் அளவானது தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றுக்கு மத்தியில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பசுப் பால் மற்றும் எருமைப் பால் லீற்றர்களின் அளவானது தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மில்கோ நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்படும் பாலுக்கான செலுத்தல்கள் 15 நாட்களுக்கொருமுறை மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள திரவப் பாலுக்காக இரண்டு மாதங்களாக செலுத்தல்கள் மேற்கொள்ளப்படாதமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திருகோணமலை மாவட்டத்தில் கோமரண்கடவல, பதவி ஸ்ரீபுர, மொரவெவ, கந்தளாய், சேருவில, தம்பலகாமம், பட்டினமும் சூழலும், கிண்ணியா, மூதூர், வெருகல் மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இருக்கின்ற பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பாற்பண்ணையாளர்களுக்கு மில்கோ நிறுவனத்தினால் தற்போது செலுத்தப்பட வேண்டிய தொகை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) குறிப்பிட்ட தொகை செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1169/ '18

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை நீர் கருத்திட்டத்தின் 04 ஆம் கட்டத்திற்கு உரித்தான நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தியடையும் திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை பூர்த்தி செய்யும் போது உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்க் கொள்ளளவு தற்போது காணப்படுகின்ற நீர் கொள்ளளவை விட எவ்வளவு அதிக பெறுமானத்தைக் கொண்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தை திட்டமிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்வதற்கு எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(iv) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சிபாரிசு செய்கின்ற டி.ஐ. நீர்க் குழாய்களுக்குப் பதிலாக வேறு ஜீ.ஈ. நீர்க் குழாய் வகையொன்றைப் பொருத்துவது தொடர்பிலான ஒப்பந்தத்துக்கு கம்பனி முயற்சிக்கின்றது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கம்புறுப்பிட்டிய பிரதேசத்திற்குப் பொருத்தப்படவுள்ள நீர்க் குழாயின் விட்டம் யாது என்பதையும்;

(ii) அதன் மூலம் மேற்படி பிரதேசத்திற்குத் தேவையான தொடர்ச்சியான நீர் விநியோகத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பதையும்;

(iii) நீர்க் குழாய்களைப் பொருத்த வேண்டியுள்ள மொத்த கிலோ மீற்றர்களின் அளவு யாது என்பதையும்;

(iv) அதன் மூலம் திக்வெல்ல மற்றும் குடாவெல்ல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் போதியளவு நீர்க் கொள்ளளவு விநியோகிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1190/ '18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரின் பிரத்தியேக பதவியணிக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உத்தியோத்தரதும் பெயர், பதவி, ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை, பதிவிலக்கம் மற்றும் அவ்விதம் ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது யார் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1276/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இறால் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) ஏற்றுமதிக்காக இறால் செய்கையினை மேற்கொள்கின்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கையின் வருடாந்த இறால் உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கையில் இறால் செய்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த வெளிநாட்டு செலாவணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) இறால் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிவாரணங்கள் யாவையென்பதையும்;

(vi) எதிர்வரும் காலத்தில் இறால் செய்கையினால் கிடைக்கும் அந்நியச் செலாவணியை அதிகரித்துக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(viii) செய்கையாளர்களை வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல். ஏன்?

1290/ '18

கௌரவ தாரக்க பாலசூரிய,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை உப வீதியின் 3 ஆம் கட்டத்தின் கீழ் சுவீகரித்துக் கொள்ளப்பட்டுள்ள காணிகளுக்கு அரசாங்கத்தினால் ஒரு சில குடியிருப்பாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) எனினும், அவ்வாறு சுவீகரித்துக் கொள்ளப்பட்ட கேகாலை, பண்டாரநாயக்க மாவத்தை, இலக்கம் 145 இல் வசிக்கின்ற போகஹலந்த குடும்பத்தவர்களுக்கு உரித்தான காணிக்கு ரூபா 2,375,750/- தொகையை செலுத்துவதற்கு, காணி கொள்ளல் மீளாய்வுச் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) எனினும், இதுவரை மேற்படி நட்டஈட்டுத் தொகை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) போகஹலந்த குடும்பத்தின் தந்தை மற்றும் சகோதரர்கள் உயிரிழந்துள்ளார்கள் என்பதுடன், அக்குடும்பத்தில் பெண்கள் மாத்திரம் எஞ்சியிருப்பதனால், இது தொடர்பில் கருணை அடிப்படையில் ஆராய்ந்து சட்டபூர்வமாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையை துரிதமாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1297/ '18

கௌரவ விமலவீர திசாநாயக்க,— சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் பிரதான பாடசாலைகளுக்கு இடையே வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கிரிக்கட் மற்றும் வேறு விளையாட்டுப் போட்டிகளின் போது பியர் மற்றும் மதுபானம் உற்பத்தி செய்கின்ற கம்பனிகளினால் பியர் அருந்துவதை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பாடசாலை மாணவர்களுக்கு இதனால் ஏற்படுகின்ற பாதிப்பை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1325/ '18

கௌரவ சிசிர ஜயகொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானோர் என்ற அடிப்படையில் கல்விச் சேவையில் பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விடயத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்குவதற்கு விதப்புரை செய்யப்பட்டுள்ள கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் என்பன யாவை என்பதையும்;

(iii) அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானார்களென விதப்புரை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அக்குழுவின் அங்கத்தவர்களும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானோர் என்ற அடிப்படையில் பதவி உயர்வுகளுக்காக விதப்புரைகளைப் பெற்றுள்ளனரா என்பதையும்;

(v) ஆமெனில், அக்குழுவின் அங்கத்தவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக விதப்புரை செய்யப்பட்டுள்ள பதவி உயர்வுகள் யாவையென்பதையும்;

(vi) அப்பதவி உயர்வுகளின் காரணமாக கல்விச் சேவையானது பாராதூரமான வீழ்ச்சிக்கு உள்ளாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1328/ ' 18

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவக வலயத்தில் எழுவைதீவில் அமைந்துள்ள பாடசாலைகள் எத்தனையென்பதையும்;

(ii) இத்தீவில் அமைந்துள்ள சரவணபவா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயார்நிலையிலுள்ள மாணவர்கள் அப்பாடசாலையில் தவணைப் பரீட்சைக்கு தோற்றுகின்ற இறுதித் தரம் யாதென்பதையும்;

(iii) தற்பொழுது அம்மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற பாடசாலை யாதென்பதையும்;

(iv) க.பொ.த. (சா/த) பரீட்சையை எழுவைத் தீவில் நடாத்துவதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1343/ '18

கௌரவ நிஹால் கலப்பத்தி,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மதுவரித் திணைக்களத்தின் கீழ் அமைக்கப்பட்ட உற்பத்தி வரிப் பிரிவில் பணியாற்றுவதை மதுவரி பரிசோதகர்கள் நிராகரித்துள்ளனர் என்பதையும்;

(ii) ஆகவே, அச்சட்டத்தில் மதுவரி பரிசோதகர் சேவைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உப பரிசோதகர்களை மதுவரி பரிசோதகர் சேவைக்கு பதவி உயர்த்தும் பொருட்டு நிதிப் பிரமாணம் 71 இன் கீழ் 10 மதுவரி பரிசோதகர் பதவிகள் வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் தலைமை அதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட மேற்படி பதவிகளை, மதுவரித் திணைக்களத்தின் உற்பத்தி வரி பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உப பரிசோதகர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதன் மூலம் பூர்த்திசெய்ய நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அங்கீகரித்துள்ளார் என்பதையும்;

(iv) பரீட்சை ஒன்றின் மூலம் பதவி உயர்வு வழங்கி மேற்படி 10 பதவிகளை நிரப்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) உற்பத்தி வரி உப பரிசோதகர்களுக்கு மது வரி பரிசோதகர் பதவிக்கான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த நபர்கள் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1354/ '18

கௌரவ காமினி லொக்குகே,— உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.15 ஆம் திகதியில் மத்திய கலாசார நிதியத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) 2015.01.15 தொடக்கம் 2018.05.15 ஆம் திகதி வரை மத்திய கலாசார நிதியத்துக்கு நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆட்சேர்ப்புகள் மத்திய கலாசார நிதியத்தியன் ஆளணிக் கட்டுப்பாட்டு திட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்;

(v) 2015.01.15 தொடக்கம் 2018.05.15 ஆம் திகதி வரை மத்திய கலாசார நிதியத்தினால் தொல்லியல் திணைக்களத்துக்கு நிரந்தர, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளாக மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2018 நவம்பர் 15, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

69/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 281, 282, 283 மற்றும் 284 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்காக பின்பற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) முன்மொழிவு இலக்கம் 284 இன் பிரகாரம் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்குரியதாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பங்குச் சந்தையின் அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நியமச் சுட்டெண்களுக்கமைவாக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையின் முன்னேற்றம் பற்றிய போக்குகளைக் காட்டுகின்ற அட்டவணையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) தற்போது அசாதாரணமாக வட்டி வீதங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமையானது பங்குச் சந்தையின் அபிவிருத்திக்குத் தடையாகக் கருதப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அது தொடர்பாக கொண்டுள்ள கருத்து யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

205/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டினுள் சனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட வெளிநாட்டு பயணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும் கலந்துகொண்டவர்களின் பெயர், பதவி மற்றும் இந்நபர்களுக்காக அரச மற்றும் அரசுசார் நிறுவனங் களினால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

275/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலுசக்தி பற்றிய தேசிய கொள்கையை உரியவாறு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது போயுள்ளது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது போனது ஏன் என்பதையும்;

(iii) எவ்வாறாயினும், எதிர்வரும் காலத்திலேனும் வலுசக்தி பற்றிய தேசிய கொள்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

755/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வியலுவ தேர்தல் தொகுதியில் மீகஹகிவுல கல்விக் கோட்டத்தினுள் ப/கரந்தகஹமட வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாடசாலையில் கல்வி பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) நிரந்தரமான விளையாட்டு மைதானம் இல்லாமை காரணமாக, அண்மையில் மேற்படி பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அருகே உள்ள வீதியொன்றில் நடாத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(iv) பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1123/ '18

கௌரவ கனக ஹேரத்,— அரச தொழில் முயற்சிகள் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகையின் (Wet lease) கீழ் விமானமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விமானம் மணித்தியாலமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வொப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதையும்;

(iv) இதற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், கிடைத்துள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குத்தகையின் முறையின் படி மேலும் விமானங்கள் வழங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், ஒப்பந்தம் செய்வதற்கு தயாராக இருக்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1291/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சு இயங்கிவரும் இராஜகிரியவில் அமைந்துள்ள 288 ஆம் இலக்க டீ.பீ.ஜே.டவர் கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரதிகளை சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் இதன் மாதாந்த வாடகை கூலி / குத்தகைக் காலம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் அக்காலம் முடிவுறும் திகதி யாது;

(iii) கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப் படாதுள்ள காலப்பகுதி யாது;

(iv) குறிப்பிட்ட காலத்துக்கான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கட்டடத்ததைப் பெற்றுக்கொள்கையில், முறையான கேள்விப் பத்திரம் கோரும் நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பின், அதற்காக முன்வைக்கப்பட்டுள்ள விலைகள் யாவை;

(ii) கட்டடத்தை வாடகைக்கு பெறுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருப்பின், அதன் பிரதியை முன்வைப்பாரா;

(iii) அமைச்சு முன்னர் இயங்கிய "கொவிஜன மந்திரய" மீளப்பெறுவதற்காக பாராளுமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதிலிருப்பு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1277/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தாதியர் பற்றாக்குறை நிலவும் மருத்துவமனைகள் யாதென்பதையும்;

(iii) தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வெற்றிடங்கள் ஏற்படுவதற்கான காரணம் யாவையென்பதையும்;

(v) மருத்துவமனைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் அசெளகரியத்திற்கு உள்ளாவதை இயன்றளவு குறைப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களை கோருவதற்கு ஏற்கனவே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தாதியர் பதவிக்கான ஆட்சேர்ப்பு தகைமைகள் யாவையென்பதையும்;

(iii) வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருப்பின் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

1295/ '18

கௌரவ தாரக பாலசூரிய,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெற்றிடமாக உள்ள மாவனெல்லை பிரதேச சபையின் செயலாளர் பதவிக்கு அதில் முன்னர் கடமையாற்றி ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான திருமதி எம்.பத்மினி செனெஹெலதா நியமனம் செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) இவருக்கு எதிராக மாகாண ஆளுநரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில் நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர், இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்படி பதவிக்கு பதில் கடமையாற்றுவதன் அடிப்படையில் பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள திரு டபிள்யு.டி.கே.ஏக்கநாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) பிரதேச சபையின் தற்போதைய தவிசாளர், திரு ஏக்கநாயக்கவுக்கு பிரதேச சபையின் செயலாளர் பதவியின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) எனவே தவிசாளரின் இந்த சட்டவிரோதமான மற்றும் தார்மீகமற்ற நடவடிக்கை தொடர்பில் சபரகமுவா மாகாண ஆளுநரை அறிவுறுத்தி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?